**தம்புள்ள மாநகர சபை**
**மாத்தளை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 30 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 யூன் 17 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 யூன் 01 ஆந் திகதி சபையின் மாநகர ஆணையாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து தம்புள்ள மாநகர சபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டில் 100 நாள் விசேட அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் பூர்த்தி செய்யப்பட்டிருந்த பூலாகல பழைய வீதிக்கு வெட்டுக்கல் பரப்பும் நிர்மாணத்தின் நிறுத்தி வைத்தல் தொகை கணக்கீடு செய்யும் போது ரூபா 832,817 கூடுதலாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டில் அழகுக் கிராமங்கள் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பூர்த்தி செய்யப்பட்டிருந்த தம்புள்ள வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தை அபிவிருத்தி செய்யும் நிர்மாணத்தின் கடன்கொடுத்தோர் மீதி ரூபா 45,822 ஆல் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டின் போது மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சிடமிருந்து கிடைக்கப்பெற்றிருந்த ரூபா 23,658,781 பெறுமதியான வாகனங்கள் மற்றும் இயந்திரங்கள் என்பன மூலதனமாக்கப்பட்டு கணக்குகளில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 329,250 பெறுமதியான 03 மடிக் கணனி கணக்கீடு செய்யப்பட்டிருக்காததுடன் இயந்திர உபகரணங்களின் பெறுமதி ரூபா 84,550 ஆல் கறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டின் போது நன்கொடையாக கிடைக்கப்பெற்றிருந்த 03 சொத்துக்களின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) மாநகர சபை ஸ்தாபிக்கப்படும் போது சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை கையளித்தல் தொடர்பான குழு அறிக்கையின் பிரகாரம் தம்புள்ள பிரதேச சபைக்குச்

செலுத்த வேண்டிய தொகை ரூபா 2,870,766 ஆக இருந்த போதிலும், 2012 இன் நிதிக்கூற்றுக்களில் தம்புள்ள பிரதேச சபையிடமிருந்து கிடைக்க வேண்டிய தொகை ரூபா 2,486,916 எனக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. அத்தவறினை மீளாய்வாண்டிலும் சீராக்கப்பட்டிருக்கவில்லை.

(ஏ) சுற்றுலா சபையின் அங்கீகாரத்தை பெற்றுள்ள 11 ஹொட்டெல்களிலிருந்து மீளாய்வாண்டில் கிடைத்த வருமான் ரூபா 1,299,414 தொகை வருமானச் செலவினக் கக்கிற்கு கொண்டு வரப்பட்டிருந்ததுடன் கிடைக்க வேண்டிய வருமானம் ரூபா 1,844,313 இற்காக நிதிக்கூற்றுக்களில் நிதிஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

நிதிக்கூற்றுக்களில் காணப்படுகின்ற ரூபா 6,045,629 கூட்டுத்தொகையான 04 கணக்கு விடயங்களுக்குரிய மீதிகளுக்கும் அவற்றுக்குரிய பட்டோலைகளுக்கும் மற்றும் அறிக்கைகளில் காணப்படுகின்ற மீதிகளுக்கும் இடையே ரூபா 320,792 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

### 1.3.3 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

தேழவயான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையினால் 02 கணக்கு விடயங்களுக்குரிய ரூபா 11,473,422 கூட்டுத்தொகையான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமானதாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவு

கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினை விஞ்சிய வருமானம் ரூபா 5,141,737 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 1689,838 ஆக இருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 3,451,899 ஆன அதிகரிப்பொன்றும் அவதானிக்கப்பட்டது.

### 2.2 பகுப்பாய்வுரீதியான நிதி மீளாய்வு

நிதி விளைவின் ரூபா 3,451,897 ஆன அதிகரிப்பிற்கு 03 வருமான விடயங்களில் அதிகரிப்பும் செலவின விடயங்கள் குறைவடைந்தமை பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

### 2.3 வருமான நிர்வாகம்

#### 2.3.1 வீதவரி

(அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை ஆதனவரி மீதி ரூபா 5,764,853 ஆக இருந்ததுடன், ஓராண்டிற்கு மேற்பட்ட காலங்கடந்த ரூபா 3,343,935 ஆன மீதிகள் உள்ளக்கப்பட்டிருந்தது.

(ஆ) தம்புள்ள மாநகர சபையின் எல்லை 54.25 சதுர கிலோ மீற்றர் வரை பரவிக் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், 06 கிலோமீற்றர் அளவிலான எல்லைக்குள் மாத்திரம் ஆதன வரி அறவிடப்பட்டிருந்தது. முன்னேற்றமடைந்த பிரதேசமொன்றான தம்புள்ள மாநகர சபை அதிகாரப்பிரதேசம் ஆதனவரி பிரதேசமொன்றாக மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாததன் காரணமாக பாரியளவு வருமானமொன்று இழக்கப்பட்டிருந்தது.

**2.3.2 வாடகை**

(அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை கடை வாடகை வருமானம் ரூபா 32,916,528 ஆக இருந்ததுடன் அதில் 99' சதவீதம் அல்லது ரூபா 32,818,652 அளவு முன்னைய ஆண்டுகளுக்கு உரிய நிலுவை வாடகையாக இருந்தது.

(ஆ) மாநகர சபையின் கடைகளை குத்தகைக்கு வழங்கும் போது குத்தகையாளர்களுடன் உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்படாமல் இருந்ததுடன் நிலுவை கடை வாடகை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3.3 அனுமதிப்பத்திரக் கட்டணம்**

மீளாய்வாண்டின் இறுதியில் அனுமதிப்பத்திரக் கட்டணங் நிலுவை மீதி ரூபா 975,868 ஆக இருந்ததுடன் அதில் 70 சதவீதம் முன்னைய ஆண்டுகளுக்குரிய நிலுவை மீதிகளாக இருந்தது.

**2.3.4 ஏனைய வருமானம்**

(அ) மீளாய்வாண்டில் 08 தொலைத் தொடர்பு கோபுரங்களிலிருந்து ரூபா 40,000 ஆன வருமானமொன்று அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) முன்னைய ஆண்டுகளுக்குரிய ரூபா 122,718 ஆன கேளிக்கை வரி வருமானத்தை மீளாய்வாண்டின் போதும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) முன்னைய ஆண்டுகளுக்குரிய ரூபா ரூபா 300,417 ஆன வாரச் சந்தைக் கட்டண வருமானத்தை மீளாய்வாண்டின் போதும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3.5 நீதிமன்றத் தண்டப்பணமும் முத்திரைக் கட்டணமும்**

மத்திய மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நீதிமன்றத் தண்டப்பணமாக ரூபா 1,008,195 தொகையும் முத்திரைக் கட்டணமாக ரூபா 7,802,550 தொகையும் அறவிடப்பட வேண்டியிருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) மாநகர சபையில் சேவையிலுள்ள வேலை காப்பாளரொருவர் சபைக்குச் சொந்தமான வாகனங்களை காப்புறுதி செய்யும் போது காப்புறுதி முகவரொருவராக இருந்துள்ளார்.

(ஆ) "e" நெந பியச தகவல் தொழில்நுட்ப நிலையத்திற்காக ரூபா 327,248 தொகை செலவிடப்பட்டு 2015 மார்ச் மாதம் நிலையம் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் செயற்படு நிலைமையில் காணப்படவில்லை.

**3.2 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

(அ) 2007 மே 11 ஆந் திகதிய 09/2007 ஆம் இலக்க பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு செயலாளரின் சுற்றறிக்கையின் 05 ஆம் பிரிவின் பிரகாரம் ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்களை மீண்டும் சேவையில் ஈடுபடுத்தும் போது வாழ்க்கைச் செலவினக் கொடுப்பனவு செலுத்த முடியாத போதிலும் ரூபா 109,833 தொகையை இரண்டு உத்தியோகத்தர்களுக்கு வாழ்க்கைச் செலவினக் கொடுப்பனவாக செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) தொற்றா நோய்கள் தொடர்பாக மக்களை அறிவூட்டும் "நோயற்ற இலங்கை" தேசிய சுகாதார நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் இரத்தம் பரிசோதனை மேற்கொள்வதற்காக தனியார் வைத்தியசாலையொன்றுக்கு அங்கீகாரமில்லாமல் ரூபா 66,912 செலுத்தப்பட்டிருந்தது.

**3.3 கழிவுப் பொருள் முகாமைத்துவம்**

மாநகர சபை அதிகாரப் பிரதேசத்தில் சேகரிக்கப்படுகின்ற கழிவுகள் சபையின் நான்கு உழவு இயந்திரங்கள் மற்றும் டிபர் வண்டி என்பவற்றைப் பயன்படுத்தி திகம்பதஹ பிரதேசத்தில் அரசாங்கக் காணியில் நாள்தோறும் இடப்பட்டிருந்ததுடன் இதன் மூலம் பல்வேறு சுற்றாடல் பிரச்சினைகள் எழுந்திருந்தமையையும் காணக்கூடியதாக இருந்தது. கழிவுகளை மீள்சுழற்சி வேலைத்திட்டத்திற்காக சபை கவனம் செலுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**3.4 சுற்றாடல் சிக்கல்கள்**

(அ) தம்புள்ள நகரல் அகற்றப்படும் கழிவுப்பொருட்கள் தம்புள்ள திகம்பதஹ அரச காடுகளில் இடுவதால் காட்டு யானை மற்றும் ஏனைய மிருகங்கள் இக்கழிவுப்பொருட்களை உணவாக கொள்வதாலும் மிருகங்கள் உட்பட சுற்றாடலுக்கும் பாரியளவு சேதமொன்று இடம்பெற்று வந்தது.

(ஆ) சபையின் களியியால் கொண்டு வரப்படுகின்ற கழிவுப்பொருட்கள் முறையான நடைமுறையொன்றின் பிரகாரம் வெளியேற்றப்படாமல் திகம்பதஹ அரச காணியில் குழிகள் தோண்டி இடப்படுவதால் சுழூல் அசுத்தமடைந்து காணப்பட்டது.

**3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**(அ) விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

(i) மத்திய மாகாண சபையின் பிரதம செயலகத்தினால் வழங்கப்பட்டிருந்த 32-1108 ஆம் இலக்க பஜரோ ஜீப் வண்டியும் 2011 திசெம்பர் 08 ஆந் திகதியிலிருந்தும் 31-9755 ஆம் இலக்க ஜீப் வண்டி 2011 ஒக்தோபர் 24 ஆந் திகதி முதல் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாது விளைவற்று காணப்பட்டன.

(ii) குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்த 07 கடைகள் மூடப்பட்டிருந்ததுடன் வாடகையும் அறவிடப்படாமல் காணப்பட்டன.

**(ஆ) வருடாந்த பொருள் மெய்மையாய்வு**

மீளாய்வாண்டிற்கான பொருள் மெய்மையாய்வு 2016 ஏப்ரல் 27 ஆந் திகதி வரையிலும் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(ஆ) மீளாய்வாண்டின் போது 04 செலவின விடயங்களின் நிதிஏற்பாடு எல்லைகளை மிகைத்து ரூபா 967,230 ஆன செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஆ) 118 செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 98,283,460 கூட்டுப்பெறுமதியான நிதி ஏற்பாடுகளிலிருந்து எவ்வித செலவினமும் செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) பாதீட்டில் 05 வருமான விடயங்களின் கீழ் அறவிடுவதற்கு மதிப்பிடப்பட்டிருந்த ரூபா 93,452,000 தொகையான வருமானம் உழைக்கப்பட்டிருக்கவில்லை

### 4.2 உள்ளகக் கணக்காய்வு

1988 (நிதி மற்றும் நிர்வாகம்) விதிக் கோவை 5(7) விதியின் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு முறைமை பேணப்பட்டிருக்கவில்லை.

### 4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

2014 ஆகஸ்ட் 08 ஆந் திகதிய சிபீசீ/சீஎல்ஜீ/1/9/1/4 ஆம் இலக்க உள்ளுராட்சி ஆணையாளரின் கடிதத்தின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவை மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் அக்குழுவை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருமான நிர்வாகம்
(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(ஈ) வாகனக நிர்வாகம்
(உ) கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர்
(ஊ) மனித வள முகாமைத்துவம்